வருவதில் ஒவ்வொருவரும் தம்மாலியன்றதைச் செய்ய வேண்டும். லண்டன் முஸ்லிம்கள் பாடுபட்டு இஸ்லாத்தைப் பரப்புவதேபோல் நாமும் பாடுபடவேண்டும். பாடுபடும் பிறரைக்கண்டு பொறாமை கொள்வதில் பயனில்லை.

நீங்கள் இஸ்லாத்தில் சொல்லப்பட்டபடி ஒழுகி ஒவ்வொன்றின் தாத்பரியத்தையும் உணர்ந்து அதனதன் காரியாகாரியங்களை ஆய்ந்தோய்ந்து பார்த்து நமக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளாமல் ஒருவரோடொருவர் மனமொத்து ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலியன்றதை இஸ்லாத்தின் மேன்மைக்காகச் செய்து இச்சன்மார்க்கத்தின் உண்மையான சித்தாந்தங்களை உலக முழுதும் பரப்ப முயலுவீரேல், "முற்பகல்மீது ஆணையாகவும், மூடுகிற நேரமான இரவின்மீது ஆணையாகவும், உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை, பகைக்கவுமில்லை. இன்னும், முன்னையதைப் பார்க்கினும் பின்னையது உமக்கு நல்லதாயிருக்கிறது. இன்னும், உம்முடைய நாயகன் இனிமேல் (சீக்கிரம்) உமக்குக் கொடுப்பான்; பின்பு நீர் திருப்திகரமாக (அவன் கிருபையை)ப் பொருந்திக் கொள்வீர்."

கமலம்-2. 1—2—20. இதழ்-2.

முபல்லிலன்

இஸ்லாத்தின் இனி வரும் உன்னதம்

(1—1—20-ல் பிரசங்கிக்கப்பட்டது.)

" அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

1. அல்லாஹுத் தஆலாவாகிய நானே மிக அறிந்தவன்.

2. ரோமர்கள் மேற்கொள்ளப் பட்டார்கள், (தோல்வியடைந்தார்கள்.)

3. (ரோமர் நாட்டுக்கு) நெருங்கியிருக்கும் தேசத்தில்; இன்னும் அவர்கள் (பாரஸீகர்களால்) மேற்கொள்ளப்பட்டுப் பிறகு (பாரஸீகர்களை மேற்கொள்வர்)

4. சில வருஷங்களில், முந்தியும் பிந்தியும் உண்டான கட்டளை அல்லாஹுத் தஆலாவுடையதே; (அஃதாவது, முன்னால் பாரஸீகர் மேற்கொண்டதும் பின்னால் ரோமர் மேற்கொள்வதும் அல்லாஹுத் தஆலாவின் காரியமாகிய அவனது நாட்டத்தினால் தான் ஏற்படும்) இன்னும் அந்நாளில் (ரோமர் பாரஸீகர்மீது ஜயம்பெறும் நாளில்) உறுதியான நம்பிக்கையுடையவர்கள் (மூமின்கள்) களிப்படைவார்கள்.

5. அல்லாஹுத் தஆலாவின் (இடத்திலிருந்து பாரஸீகருக்கு விரோதமாய் ரோமருக்கு உண்டாகும்) உதவியால் யாருக்கு (அல்லாஹ்) நாடுகிறானோ (அவனுக்கு) உதவி செய்வான்; அவன் மேற்கொள்பவனாயும் (பராக்கிரமசாலியாயும்) அன்புடையவனாயுமிருக்கிறான்.

6. (மூமின்களுக்கு உதவிபுரிவதாக) அல்லாஹுத் தஆலா வாக்குறுதிசெய்தான்; அல்லாஹ் தானளித்த வாக்குறுதியைத் தவறச் செய்யான்; ஆனால் உதவிசெய்வதாக அல்லாஹுத் தஆலா அவர்களுக்களித்த வாக்கைப்) பெரும் பான்மையோர் அறியமாட்டார்கள்.

7. அவர்களோ மறுமையை மறந்தவர்களாயிருந்து கொண்டு இகலோக வாழ்க்கையான வெளி விஷயங்களை அறிகின்றார்கள்.

8. அவர்கள் தங்கள் மறதியினின்றும் மீளும்பொருட்டுத்) தமக்குள்ளேயே அவர்கள் சிந்தித்துப் பார்க்க

வில்லையா? உண்மையான நியாயத்துடனும் குறிப்பிடப் பட்ட ஒரு தவணைக்காகவுமேயன்றி வானங்களையும் புவியையும் இவற்றிற்கு மத்தியிலுள்ள வற்றையும் அல்லாஹுத் தஆலா படைக்கவில்லை. இன்னும் மனிதர்களுள் பெரும்பான்மையோர் மிகத் திட்டமாகத் தங்கள் நாயகனுடைய தரிசனத்தை மறுத்தவர்களாயிருக்கிறார்கள்.

9. அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி வந்ததென்று பார்க்கவில்லையா? இவர்களைக்காட்டினும் அவர்கள் பலாட்டியத்தில் சிறந்தவர்களாயிருந்து பூமியைப் பறித்தார்கள்; இன்னும் இவர்கள் அதன்மேல் கட்டியிருப்பதைக் காட்டினும்மிகப்பெருக்கமாய்க்கட்டியிருந்தார்கள். ஸ்பஷ்டமான உபதேசங்களுடன் தூதர்களும் (ரஸூல் மார்கள்) அவர்களுக்காக வந்தார்கள்; ஆதலின் அவர்களுக்கு அநீதம் செய்யவேண்டுமென்பது அல்லாஹ்வுக்கு யுக்தமாய்ப்படவில்லை; ஆனால் அவர்கள் தங்களுடைய ஆவிக்குத் தாங்களே அநீதம் செய்துகொண்டார்கள்.

10. பிறகு தீமை செய்தவர்களின் முடிவு தீமையாகவே முடிந்தது; ஏனெனின், அவர்கள் அல்லாஹ்வின் அறிக்கைகளைப் புறக்கணித்து அவற்றைத் பரிகசம் செய்தார்கள்."—(அல்குர்ஆன் 30 : 1-10)

வேதக்காரரான ரோமருக்கும் விக்கிரகத் தொழும்பரான பாரஸீகர்களுக்கும் நீண்டகாலமாய் யுத்தம் நடந்து வந்தது. மேலே சொல்லப்பட்ட ஸூரத்துரூம் வெளிப்படுத்தப்பட்ட காலமாகிய கி. பி. 615 அல்லது 616-ல் பாரஸீகர்களால் ரோமர்கள் வெல்லப்பட்டார்கள். ரோம் தேசத்து போக்காஸ் என்பவரால் கொல்லப்பட்ட மௌரீஸ் என்பவரின் ஆவிக்காக இரத்தப்பழி வாங்கவேண்டு

மென்று தீர்மானங்கொண்ட பாரஸீக தேசத்து அரசனான 2-வது குஸ்ரூஸ் கி. பி. 602-வது ஆண்டில் ரோம் தேசத்தாருடன் யுத்தத்துக்கு ஆரம்பித்து, கி. பி. 615, 616-ல் பாரஸீகர்கள் "ரோமர் நாட்டுக்கு நெருங்கியிருக்கும் தேசத்தில்" அவர்களை ஜயித்தார்கள். குஸ்ரூஸின் படைகள் முதலில் ஸீரியா, ஆசியாமைனர் முதலிய தேசங்களைப் பிடித்துக் கொள்ளைகொண்டு அப்பால் 608-ல் சால்ஸிடோன் என்னுமிடத்தை நோக்கிச் சென்றார்கள். 613, 614-ல் திமிஷ்கு, ஜெரூசெலம் (பைத்துல் முகத்தஸ்) இவ்விரண்டு ஸ்தலங்களையும் பாரஸீகச் சேனைத்தலைவனான ஷாஹாபராஸ் கைப்பற்றிக் கொண்டு தன் வெற்றிக்கு அறிகுறியாக அங்குள்ள சிலுவையையும எடுத்துக்கொண்டு போய்விட்டான். பிறகு கொஞ்சநாளைக்குள் எகிப்துதேசமும் பாரஸீகரால் ஜயிக்கப்பட்டது. ரோம் தேசத்துக்குள் உள்நாட்டுக் கலகம் மிகுந்திருந்தபடியாலும் ஆவார் என்றும் ஸ்லாவ் என்றும் சொல்லப்பட்ட இரண்டு ஜாதியார்கள் ரோமர் நாட்டுக்கு ஹிம்சைசெய்து வந்ததனாலும் ரோம் தேசத்தினர் பாரஸீகர்களுடன் எதிர்நின்று யுத்தம்செய்ய முடியாதவர்களாய்ப்போய்விட்டனர். ரோமரின் தேசங்களை யெல்லாம் பிடித்துக்கொண்ட பாரஸீகர் கடைசியில் கான்ஸ்டான்டிநோபில் (குன்ஸ்துன் துன்யா) என்னும் தலைநகரின் கோட்டைவாயில்வரை வந்துவிட்டனர். தங்களுடைய ராஜ்யத்துக்குள்ளடங்கிய தேசங்களெல்லாம் போய்விட்டபடியால் ரோமர் பாரஸீகரால் தோல்வியடைந்தனர். இதைத்தான் அல்குர்ஆன், "ரோமர் நாட்டுக்கு நெருங்கியிருக்கும் தேசத்தில் ரோமர்கள் தோல்வியடைந்தார்கள்," என்று குறிப்பிட்டது. இந்த ஸூரத்துர்ரூம் என்னும்

அத்தியாயம் இறங்கிய காலத்தில், "ரோமர் நாட்டுக்கு நெருங்கியிருக்கும் தேசத்தில் ரோமர்கள் தோல்வியடைந்தார்கள்," என்பது மக்கமாநகரிலிருந்த ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரிந்தவிஷயமே. யாருக்கும் மேலே சொன்ன வாக்கியத்தைச் சொல்ல ஒருகுறிகாரன் தேவையில்லை; இதில் ஒன்றும் அற்புதமில்லை. இன்ஜீல் வேதக்காரரான ரோமர்களைக்காட்டிலும், நெருப்பைவணங்கும் பாரஸீகர்களிடத்தில் அதிகப்பிரியம் வைத்திருந்தார்கள் மக்காஷரீபிலிருந்த காபிர்கள். முஸ்லிம்கள் மட்டும் ரோமர்மீது பக்ஷம்பாராட்டிவந்தனர்; முஸ்லிம்களைப்போல் ரோமரும் வேதக்காரரானபடியால் இவர்களுக்குள் அபிமானமிருந்தது. அப்படிப்பட்டவேளையில் பாரஸீகர் ரோமரை ஜயித்தது. இச்செய்தியைக் கேட்டவுடன் தங்கள் பக்ஷத்தாருக்கு வெற்றியுண்டானதென்றும் வேதக்காரரான ரோமர்களுக்குத் தோல்வியுண்டானதென்றும் மக்காஷரீபிலிருந்த காபிர்கள் சந்தோஷமடைந்தார்கள்; இன்னும் அக் காபிர்கள் குதூகலங்கொண்டு, "பாரஸீகர் ரோமரைவென்று அடக்கியதுபோல் உங்களை நாங்கள் வென்று அடக்குவோம்," என்று முஸ்லிம்களிடத்தில் கேவலமாகப் பரிகசம் செய்யத் தலைப்பட்டனர். மக்கத்துக்காபிர்கள் விக்கிரகங்களை வணங்குவது போல் பாரஸீகர்கள் நெருப்பை வணங்குவதால் பாரஸீகர்களுக்கு ஜயம் வந்ததுபோல் தமக்கும் ஜயம்வருமென்றும், இன்ஜீல் வேதக்காரரான ரோமருக்கு வந்த அபஜயம் போல் அல்குர்ஆன் வேதக்காரரான முஸ்லிம்களுக்கும் அபஜயம் வருமென்றும் அக் காபிர்கள் எண்ணினார்கள். மக்காவின் காபிர்கள் தோல்வியடைந்து முஸ்லிம்கள் கடைசியில் வெற்றிகொள்வார்களென்று இதற்குமுன் பல தடவைகளிலும் அல்குர்

ஆன் முன் எச்சரிக்கையாய் அறிவித்திருக்கும் தீர்க்க தரிசனங்களெல்லாம் பலிக்காமல் கடைசியில் காபிர்கள் தாமே வெற்றியடையப்போவதாய் உற்சாகங்கொண்டு முஸ்லிம்களைப் பரிகசஞ்செய்து அவர்களின் பரிசுத்தவேதமான அல்குர்ஆனையும் அதை வெளியிட்டருளும் அல்லாஹுத் தஆலாவையும் மிகக்குறைவாக உதாசினஞ்செய்து வந்தனர்.

இவ்வாறிருக்கும்போது எமது நபிகள் பெருமானார் மக்காஷரீபைவிட்டுத் திருமதீனாவுக்கு யாத்திரையாகப் புறப்பட்டுச்சென்றதற்கு (ஹிஜ்ராத்துக்கு) 6 அல்லது 7 வருஷங்களுக்கு முன் கி. பி. 615 அல்லது 616ல் மேற்கூறிய ஸூரத்துர்ரூம் இறக்கப்பட்டது. இந்தஸூராவில் இரண்டு வகையான முன்னறிக்கைகள் (தீர்க்கதரிசனம்-முஅஜிஸாத்து, அற்புதம்) சொல்லப்படுகின்றன. ரோமர்கள் தங்கள் தேசங்களையும் இழந்து உள்நாட்டுக்கலகத்தாலும் சின்னாபின்னப்பட்டுக் கடைசியாய்ப் பாரஸீகர்களால் அடியோடு மேற்கொள்ளப்பட்டார்கள். இப்படி நசித்துப் போன ரோமர் மீண்டும் தலைகிளப்புவாரென்று எவராலேனும் சொல்லமுடியுமோ? தங்களுடைய ஊருக்குள்ளேயே முன்னுக்குவர அவர்களுக்குப் பலஆண்டுகள் செல்லும்; அப்படியிருக்கும்போது தங்களை வென்று அடக்கிய பாரஸீகர்களுடன் எதிர்ப்பதைப்பற்றிப் பல நூற்றாண்டுகள் வரையில் இவர்கள் (ரோமர்கள்) கனவிலும் கருதமுடியுமோ? ஆனால் அல்லாஹுத் தஆலா சர்வக்ஞன் ஆனதால் ரோமர்களைக்குறித்து ஒரு முன் அறிக்கை (தீர்க்கதரிசனம்) செய்கிறான். "இன்னும், அவர்கள் (ரோமர்கள்) பாரஸீகர்களால் மேற்கொள்ளப்பட்டுப் பிறகு சில வருஷங்களில் பாரஸீகர்களை மேற்கொள்வார்கள்," என்று

கூறியுள்ளான். இம்மட்டோடு நில்லாமல் இறைவன் இன்னும் மகா அற்புதமான வேறொரு தீர்க்க தரிசனத்தையும் அதே ஸூறாவில் விளக்குகிறான்: "முந்தியும் பிந்தியும் உண்டான கட்டளை அல்லாஹுத் தஆலாவுடையதே. இன்னும், அந்நாளில் அல்லாஹுத் தஆலாவினிடத்திலிருந்து உண்டாகும் உதவியினால் மூமின்கள் களிப்படைவார்கள்," என்பது 2 வது தீர்க்க தரிசனம். முழுவெற்றியடைந்த பாரஸீகரை ரோமர் சில வருஷங்களில் எதிர்த்து ஜயமடைவார் என்று சொல்வது எப்படி மனிதபுத்திக்கு எட்டாதோ அப்படியே யுத்தப்பழக்கமில்லாத கொஞ்சம் பேர் முஸ்லிம்கள் மகா பலாட்டிய முள்ள கைதேர்ந்த போர்வீரர்களான மக்காவின் காபிர்களை அதேநாளில் ஜயிப்பார்கள் என்பதும் மனிதரின்புத்திக்கு எட்டக்கூடிய விஷயமன்று. மனிதருக்கு ராஜ்ய தந்திரத்தில் எவ்வளவு நிபுணத்தனமான மேதாவித்தன மிருந்தபோதிலும் அக்காலத்தில் ரோமர்களும் முஸ்லிம்களும் இருந்த மிகக்கேவலமான நிலைமையை நோக்கி அவர்கள் இன்னும் சில வருஷங்களில் பலாட்டியமுள்ள தம் எதிரிகளை வென்று ஜயம்பெறுவாரென்று யாரால் முன்னறிந்து சொல்லமுடியும்? இது மனிதரால் முன்னறிந்து சொல்லக்கூடியகாரியமன்று; எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவைத் தவிர மனிதர்களால் இப்படிப்பட்ட முன் அறிக்கை சொல்ல முடியாது. ராஜ்யதந்திர நிபுணர்கள் இப்படிப்பட்ட அற்புதமான தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்கள். அக்காலத்தில் ரோமரும் முஸ்லிம்களும் இருந்த கேவலமான க்ஷீணதிசையை நோக்குங்கால் மானிடவர்க்கத்திலுள்ள எவரும் இப்படிப்பட்ட முன் அறிக்கைசொல்லமுடியாது.

"யாருக்கு அல்லாஹ் நாடுகிறானோ அவனுக்கு உதவி

செய்வான். அல்லாஹுத் தஆலா உதவிபுரிவதாக வாக்குறுதி செய்தான்; அவன் தானளித்த வாக்குறுதியைத் தவறச்செய்யான்," என்னும் இறைவனது அருள்வாக்கைப்போல் ஸூறத்துர்றூம் இறங்கிய 615, 616-வது ஆண்டிலிருந்து 8-அல்லது 9-வருஷங்களுக்குள் கி. பி. 624-ல் முன் தோல்வியடைந்த ரோமரும் பாரஸீகரை வென்றார்கள்; 313 முஸ்லிம்களும் பதுரு யுத்தத்தில் 1000 பேர்களுக்கு மேற்பட்ட காபிர்களை வென்றார்கள். நாம் தமிழில் சில வருஷங்கள் என்று மொழிபெயர்த்திருக்கும் அரபுவார்த்தை "பிஃஉன்" என்பது; இதன்பொருள் அரபிபாஷையில் 3-முதல் 9-அல்லது 10-வருஷம் வரையில் என்பதாகும். இதற்கிணங்கவே 615, 616-ல் ஸூறத்துர்றூம் இறங்கிற்று; 624-ல் பாரஸீகர்களும் மக்காவின் காபிர்களும் முறியடிக்கப்பட்டார்கள். 624-ல் ஹிராக்ளியஸ் என்பவர் மீடியாதேசத்தின் வடபாகத்தில் படையெடுத்துச்சென்று கௌட்ஸாக் என்னு மிடத்திலிருந்த பெரிய நெருப்பு ஆலயத்தை இடித்தார். அதே ஆண்டில் யுத்தப்பயிற்சியில்லாத 313 முஸ்லிம் வாலிபர்கள் பதுரு யுத்தத்தில் குரைஷ்குலத்துச் சுமார் 1000 பேருக்கு மேற்பட்ட வீரர்களை யெல்லாம் வென்று காபிர்களுக்குப் பெருத்த அபஜயத்தை உண்டுபண்ணினார்கள். இதுதான் இஸ்லாத்தின் முதல் வெற்றி; இதன்பின் இஸ்லாம் மேன்மேலும் ஓங்கித்தழைக்க ஆரம்பித்தது. கடைசியில் கி. பி. 630-ம் ஆண்டில் மக்கமாநகரும் முஸ்லிம்களின் வசமாய் எமது நபிகள் பிரான் இணையில்லா உன்னதத்துடன் வாழ்ந்துவந்தார்கள். அதற்குள் பாரஸீக ராஜ்யமும் சிதைவுண்டு சின்னாபின்னப்பட்டு அராஜரீகக் கொள்கையில் சிக்கி க்ஷீணித்துப் போய்விட்டது.

ராஜ்ய தந்திரத்தில் நிபுணத்தனமுள்ள மேதாவிகள் தங்களுடைய அறிவைக்கொண்டு இப்படிப்பட்ட முன் அறிக்கையைச் செய்யமுடியுமோ வென்று புத்திமான்களாகிய நீங்கள் நன்றாக நிதானித்துப் பாருங்கள். ஸூரத்துர்ரூமில் சொல்லியிருப்பது போல் அவ்வளவு குறிப்புடன் 3-முதல் 9-அல்லது 10-வருஷங்களுக்குள் இப்படிப்பட்ட தலைகீழான மாறுதல்கள் நேரிடுமென்று ராஜ்யதந்திர நிபுணர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுதல் முடியுமோ? இவ்வுலகம் தோன்றிய நாள்முதல் இதுவரையில் யாரேனும் மேலே ஆண்டவன் சொன்னதுபோல் அவ்வளவு குறிப்பான தீர்க்கதரிசனத்தைச் சொல்லியிருக்கின்றாரா? ஒருதேசத்தார் மற்றொரு தேசத்தாரின் ராஜ்யங்களை நீண்டகாலம் வரையில் ஒவ்வொன்றாய்க் கைப்பற்றிக்கடைசியில் தோல்வியடைந்தவரின் தலைநகரம் வரையில் வெற்றியடைந்து வந்திருக்கும்போது அவ்வாறு தோல்வியடைந்து நசித்துப்போனவர்கள், சிலவருஷங்களுக்குள்-அதாவது ஜயங்கொண்ட வீரர்களுக்குள் சோம்பலாவதுகுழப்பமாவது கலகமாவது ஏற்பட்டு அதனால் அவர்கள் பலஹீனமடையுங் காலத்துக்குள்—தங்களுடைய இழந்ததேசங்களையும் திரும்பக்கைப்பற்றிக்கொண்டு முதலில் ஜயங்கொண்டவர்களின்தலைநகரையும் தாக்கக்கூடிய சாமர்த்தியமுடையவர்களாய்ஆய்விடுவார்கள் என்று ராஜ்ய தந்திர நிபுணர்கள் தீர்க்க தரிசனம் சொல்ல இயலுமோ? அந்த நிபுணர்களென்றுசொல்லக்கூடியவர்களுக்கு இவ்வளவு மனோதைரியம் எப்படி ஏற்படும்? எல்லாம் வல்ல இறைவனாலல்லாமல் எப்படிப்பட்ட மனிதராலும் இப்படிச் சொல்வது முடியாது. அல்லது, தங்கள் சொந்த ஊராரால் வெறுக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் கடைசியில் தம் ஊரைவிட்டு அயலூரில்

அடைக்கலம் புகுதும் 100 முஸ்லிம்கள் பிறகு 9-வருஷத்திற்குள் தங்களூர் போர்வீரர்கள் 1000-பேருக்கு அதிகப்பட்டவரை அதம் செய்து ஜயங்கொள்வாரென்றுதான் எந்த நிபுணனால் முன்னறிந்து சொல்லமுடியும்? ஆனால் சோதிடநூல் வல்லவர்கள் இப்படிப்பட்ட அற்புதங்களை முன்னறிந்து சொல்லக்கூடுமென்று சிலர் வாதிக்கக்கூடும். ஆனால் சோதிடநூல் வல்லவர்கள் இப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் ஒன்றைச்சொல்லி அது சோதிடர் சொன்ன வண்ணமே நிகழ்ந்ததாய் நாம் இதுவரையில் சரித்திரத்தில் ஓர் உதாரணத்தையும் கண்டதில்லை. இந்த ஸூரத்தூரும் இறங்கின காலத்தில் மக்காவில் அநேகங் காபிர்சோதிடர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட சோதிடர்களெல்லாம் மேலே சொல்லப்பட்ட இரண்டு தீர்க்கதரிசனங்களையும் கேள்விப்பட்டபோது, "அவையெல்லாம் பித்தனுடைய பிதற்றல்" என்று உதாசினத்துடன் பரிகசம்செய்ய ஆரம்பித்தனர். ஆனால் முஸ்லிம்கள் மட்டும் இவையெல்லாம் சீக்கிரத்தில் நிகழக்கூடிய மெய்யான முன்னறிக்கையென்றும் இவை அல்லாஹ்வுத் தஆலாவின் தீர்க்கதரிசனமென்றும் உறுதியாய் நம்பினார்கள். "இன்னும் அவர்கள் (ரோமர்கள்) பாரஸீகர்களால் மேற்கொள்ளப்பட்டுப்பிறகு சிலவருஷங்களில் பாரஸீகர்களை மேற்கொள்வர்," என்னும் ஆயத்தைக் கேட்டவுடன் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில், "இன்னும் 3 வருஷத்திற்குள் ரோமர் பாரஸீகர்களை வெல்வர்," என்று சொன்னார்கள். அப்போது அங்குவந்திருந்த காபிர்களுள் ஒருவனான உபை பின் கல்பு என்பவன் 10 ஒட்டகம் பந்தயம் வைத்து "அபூபக்கர் ஸித்தீக் சொல்வதுபோல் நடைபெறாது," என்றான். இதைக் கேள்

விப்பட்ட எமது நபிகள் பெருமானார் அபூபக்கர் ஸித்தீக் அவர்களை நோக்கி, "நீர் 3 வருஷமென்று சொன்னது தவறு; பில்உன் என்னும் பதத்துக்கு 3 முதல் 9 அல்லது 10 வருஷம் என்பது பொருள்," என்றார்கள். உடனே மேற்கூறிய பந்தயத்தின் காலம் 10 வருஷம் என்று ஏற்படுத்தப்பட்டு 100 ஒட்டகம் பந்தயம் வைத்துத் திட்டம் பண்ணினார்கள்.

முஸ்லிம்களெல்லாரும் மேற்கூறிய தீர்க்கதரிசனம் நடைபெற்றே தீருமென்று நம்பினார்கள். ஆனால் காபிர்களெல்லாரும் இஃதொரு பொய்மொழியென்றும் இதற்காக வீணே அபூபக்கர் முட்டாள் தனத்துடன் 100 ஒட்டகம் கொடுக்கப்போகிறாரென்றும் பரிகசம் செய்தார்கள். 100 அரபிகள் மட்டும் (அப்போதைய முஸ்லிம்கள்) அல்லாஹுத் தஆலாவின் தீர்க்க தரிசனத்தை மெய்யென்று நம்பினார்கள்; ஆயிரக்கணக்கான காபிர்கள் "இவையெல்லாம் பித்தனுடைய பிதற்றல்," என்றார்கள். ஆனால் சகோதரர்காள்! "உதவி புரிவதாக அல்லாஹுத் தஆலா வாக்குறுதி செய்தான்; அல்லாஹ் தானளித்த வாக்குறுதியைத் தவறச்செய்யான்," என்பதேபோல் கி. பி. 624ல் முஸ்லிம்களும் ரோமர்களும் ஏககாலத்தில் வெற்றியடைந்தார்கள். பதுருயுத்தம் நடந்த தினத்தில் குறைஷ்குலக் காபிர்கள் 1000 பேருக்கு மேற்பட்டவர் தோலவியடைந்து 313 முஸ்லிம் வெற்றியடைந்து அந்த வெற்றியின் சந்தோஷத்தில் அவர்கள் மூழ்கியிருக்கும் போது அதே தினத்தில் பாரஸீகர்மீது ரோமர் வெற்றியடைந்தார்கள் என்று ஜிப்ரீல் (இவர்களுக்கு இறைவன் கருணைபுரிவானாக) அவர்கள் தூதுகொண்டு இறங்கினார்கள். இதையறிந்த மூமின்கள் முன்னையைக் காட்டி

னும் இரட்டிப்புச் சந்தோஷ மடைந்தார்கள்.

"அந்நாளில் அல்லாஹுத் தஆலாவி னிடத்திலிருந் துண்டாகும் உதவியினால் மூமின்கள் களிப்படைவார்கள்," என்று எமது இறைவன் முன்னறிக்கை செய்தான். ஆயு தபாணிகளல்லாத முஸ்லிம்களின் 313 பேர் யுத்தப்பயிற்சி யில்லாதவர்களாயிருந்தும் தங்களைவிட மூன்று பங்குக்கு மேலிருந்த குறைஷ்குலத்துக் கைதேர்ந்த யுத்தவீரர்க ளான காபிர்களை 624ல் பதுரு யுத்தத்தில் ஜயங்கொண்ட போது அல்லாஹுத்தஆலா தன் தீர்க்க தரிசனத்தை முழுதும் நிறைவேற்றினனல்லவா? ஏகநாயனை வணங்கும் இன்ஜீல்வேதக்காரர்களான ரோமர்களை வென்றடக்கிய பாரஸீகர்களை வெற்றிக்கொடி நாட்டச்செய்து தமது விக் கிரக ஆராதனையில் வீரம்பெறவேண்டுமென்று எதிர்பார்த் திருந்த மக்காஷரீபின் காபிர்களின் எண்ணம் அடியோடு ஒழியும்படி அதே ஆண்டில் ரோமர்கள் பாரஸீகர்களை வென்றடக்கவில்லையா? அப்பொழுது ஆண்டவனது உதவி செம்மையாய் விளங்கவில்லையா? இந்த ஸூரா இறங்கிச் "சில வருஷங்களில்" இந்த இரண்டு வெற்றியிலும் ஆண் டவன் தன் உதவியைக்காட்டி மூமின்களைக் களிக்கச்செய் தான். இவ்வுலகம்தான் மெய்யென்றும் இதற்கப்பால் ஓர் ஆண்டகை இல்லையென்றும் அப்படிப்பட்ட ஆண்ட வன் தன் படைப்புக்களின் முன்னேற்றத்துக்காகத் தான் ஒன்றும் முன்னறிக்கை செய்வதில்லையென்றும் சாதித்து வந்த அக்காலத்திய காபிர்கள் இந்த ஸூரத்துர்ரூமில் சொல்லப்பட்ட இரண்டு விஷயங்களும் நடக்கப்போவ தில்லையென்று நபிகள் நாயகத்தைப் பரிகசம் செய்தார் கள். ஆனல், "மூமின்களுக்கு உதவிபுரிவதாக அல்லா ஹுத் தஆலாவாக்குறுதி செய்தான்; அல்லாஹ் தானளி

த்த வாக்குறுதியைத் தவறச்செய்யான்; ஆனால் உதவி செய்வதாக அல்லாஹுத்தஆலா அவர்களுக்களித்த வாக்கைப் பெரும் பான்மையோர் அறியமாட்டார்கள்."

இவ்வண்டத்தையும் இதன் கண்ணுள்ள எண்ணிறந்த வஸ்துக்களையும் ஆண்டவன் வீணாகப் படைக்கவில்லை; இவற்றின் ஆழமான அந்தரங்கத் தாத்பரியங்களைச் சாமானியர் அறியமாட்டார்கள். ஆனால் அது சாதாரணமான உண்மை யாகத்தான் இருக்கிறது. நாம் எல்லாரும் நபிமார்களுமல்ல, ஆண்டவனது அருள் பிரசாதத்தையடைந்தவர்களுமல்ல. நபிமார்களும் ஆண்டவனுடைய அருள் பிரசாதத்தை யடைந்தவர்களும் மட்டுமே ஆண்டவனது சிருஷ்டியின் இரகசிய உண்மை யறிவார்கள். மிகுதிப்பேர்கள் "இகலோக வாழ்க்கையான வெளிவிஷயங்களை (மட்டும்) அறிகின்றார்கள்." சாமானியர்கள் தங்களுடைய அறிவின் குறைவை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்; ஏனெனின் வெளித்தோற்றமான இவ்வண்டத்தில் காணப்படும் அநேக அற்புதங்களுக்குக் காரணம் அவர்களுக்கு விளங்குவதில்லை. அண்டத்தில் காணப்படும் அநேக அதிசயங்களை நம்முடைய அறிவைக்கொண்டு தீர்மானம் செய்யமுடியாமல் நாம் அடிக்கடி கஷ்டப்படுகிறோம். இப்படிப்பட்ட அதிசயங்களை நமது இயற்கையான அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்யமுடியாதபோது, இவ்வெளிப்படையான உலகைக் காட்டினும் ஸூக்ஷ்மமான வேறோர் உலகம் உண்டென்பதையும் அந்த ஸூக்ஷ்மமான உலகை யறிந்தால்தான் இவ்வண்டத்தில் காணப்படும் அநேக அதிசயங்களின் இரகசியமெல்லாம் விளங்கு மென்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நம்முள் ஒவ்வொருவருக்கும் அந்த ஸூக்ஷ்ம உலகின் இரகசி

யம் (பஷாரத்து) வெளியாவதில்லையென்பது நமக்குத் தெரிந்தவிஷயமே. இப்படி நாமெல்லாம் அந்தகாரத்தில் அலையும்போது நமக்கு வழிவிளக்கம் செய்யக்கூடியவர்கள் அந்த ஸூக்ஷ்ம உலகின் ஸூக்ஷ்மத்தை அறிந்தவர்களே (முபஷ்ஷராத்தையுடையவர்களே). நமது வெளிப்படையான கண்களுக்குப் புலப்படுவதைவிட அபாரமான இரகசியமெல்லாம் (முபஷ்ஷராத்து) அவர்களுடைய அகக் கண்ணுக்கு வெளியாகும்; அவர்களுக்குத்தான் தேவ ஒளி கிட்டும். அவர்கள் தங்களுடைய ஞானக்கண்ணால் விஷய உண்மைகளைக்கண்டு நமக்கு நல் உபதேசம் செய்வார்கள். ஆதலின் நாமெல்லாம் "மறுமையை மறந்தவர்களா" யிருப்பது தகாது.

"அவர்கள் தங்கள் மறதியினின்றும் மீளும் பொருட்டுத்தமக்குள்ளேயே அவர்கள் சிந்தித்துப்பார்க்கவில்லையா?" தன்னையுணர்ந்தவன் தன் தலைவனையுணர்வான் என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை போலும். "உண்மையான நியாயத்துடனும் குறிப்பிடப்பட்ட ஒருதவணைக்காகவுமேயன்றி வானங்களையும் புவியையும் இவற்றிற்கு மத்தியிலுள்ள வற்றையும் அல்லாஹுத் தஆலா படைக்கவில்லை. இன்னும், மனிதர்களுள் பெரும்பான்மையோர் மிகத்திட்டமாகத் தங்கள் நாயனுடைய தரிசனத்தை மறந்தவர்களாயிருக்கிறார்கள்."

இவ்வண்டமும் அதன்கண்ணுள்ள பொருள்களும் இன்ன காரணத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றனவென்று எமது அல்புர்க்கான் வேதம் செவ்வனே விளக்கிக்காட்டுகிறது. மனிதர்கள் தங்களையே தாங்கள் நோட்டமிட்டுப் பார்க்கமாட்டார்களோ? "நான்யார்? என் உள்ளம் யார்? என்தலைவன்யார்? எங்கிருந்து இங்கு வ

தேன் ? இங்கிருந்து எங்கே போவேன்?" என்று ஒருவர் ஒருவிஞடியேனும் சிந்தித்துப்பார்பாராயின் அவருக்கு ஒரு வழிகாட்டி வேண்டுமென்னும் அவசியம்தோன்றும். ஒரு வழிகாட்டியில்லாமல் மேலே சொன்ன கேள்விகளுக்கு விடைபுரியாமல் வழிதடுமாறும் வேளையில் நம்மைக் காட்டினும் மிகப்பெரியார் ஒருவர் வந்து நமக்கு நல்வழி காட்டவேண்டிய அவசியம் நேரிடுகிறது. இவ்வண்டமும் அதிலுள்ள வஸ்துக்களும் ஏன் இப்படிப் படைக்கப்பட்டிருக்கின்றன வென்று அப்பெரியார்தான் வழிகாட்ட வேண்டும். ஆடவரேனும் பெண்டிரேனும் சற்று நிதானித்துத் தமக்கு ஏன் மற்றப்பிராணிகளைக்காட்டினும் இவ்வளவு மிகுதியான பகுத்தறிவு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று ஆலோசிக்கத்தொடங்கினுல் அப்போது நாம் மேலே சொன்ன விஞக்களெல்லாம் உதிக்கும் ; அப்போது இச்சிருஷ்டியின் இரகசியம் என்ன வென்று தெரிந்துகொள்ள ஓர் அவா தோன்றும்; அப்படித்தோன்றும் சந்தேகத்துக்கு இறைவனுல் வெளிப்படுத்தப்பட்ட வேதத்தில் தான் விடைகிடைக்கும். "உண்மையான நியாயத்துடனும் குறிப்பிடப்பட்ட ஒருதவணைக்காகவுமே யன்றி வானங்களையும் புவியையும் இவற்றிற்கு மத்தியிலுள்ளவற்றையும் அல்லாஹுத் தஆலா படைக்கவில்லை." இவ்வுண்மை அப்போது வெளியாகும். சித்து அசித்து ஆகிய அனைத்தும் அல்லாஹ்வி னிடத்திலிருந்தே தோன்றி அல்லாஹ்வினிடத்திலேயே முடிவடைகின்றன. சித்து அசித்து எல்லாவற்றிலும் ஆண்டவனுடைய அருள் நிறைந்த ஆவி நிறைந்திருக்கிறது. இந்த ஆவியானது அசித்துப் பொருளிலிருக்கும்போது அது தான் என்னும் அறிவையடையாமலிருக்கிறது; பிறகு அதே ஆவி சித்துப் பொருளில் காணப்

படும்போது தான் என்னும் உணர்ச்சியை யடைகிறது. உயிருள்ள பொருள்களென்று நாம் சாதாரணமாய்க் கரு தும்பொருள்களெல்லாம் மனிதனுடைய நிலைமையை யடையுமட்டும் தான் என்னும் உணர்ச்சியோடுமட்டும் இருக்கின்றன. அவற்றிற்கு அப்போது பகுத்தறிவென் னும் ஞானபாகம் உதிப்பதில்லை; ஆனால் மனிதனுக்கோ ஆண்டவனுடைய ஆத்மா இவனிடத்தில் நிறைந்திருப்ப தோடு பகுத்தறிவும் குறைவில்லாமல் பொருந்தியிருக்கி றது. பகுத்தறிவு தோன்றினவுடன் மனிதன் நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டவனாகிறான். அவன் அவ்வாறு தன் பகுத்தறிவைச் செலுத்தி நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் தெரிந்துகொள்ள எத்தனிக் கும் வேளை ஆண்டவனுடைய வேதமானது அவனுக்கு நல் லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் அறி விப்பதற்கு முன் வருகின்றது. அவ்வேதத்தின் வழியை மனிதன் பின்பற்றினபடியே கெட்டதை யெல்லாம் ஒது க்கி நல்லதையே கடைப்பிடித்துத் தன் பகுத்தறிவை மேன் மேலும் உன்னத நிலைமைக்குக் கொண்டுபோம்போது அவ னுக்கு ஞானக்கண் திறந்து முபஷ்ஷாத்து (ஆத்மஞான வெளிப்பாடுகள்) உண்டாகின்றன. முபஷ்ஷாத்தை ஒரு வர் அடைந்துவிட்டால் அப்பால் ஆண்டவனுடைய இரக சியமெல்லாம் பளிங்கு விளக்குக்குள் இருக்கும் தீபம் போல் நன்கு புலப்படும். சிருஷ்டியின் இரகசியம் இப்படி யிருந்தும், "மனிதர்களுள் பெரும்பான்மையோர் மிகத்திட் டமாகத்தாங்கள் நாயகனுடைய தரிசனத்தை மறுத்தவர்க ளாயிருக்கிறார்கள்." அதாவது, தாங்கள் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தாங்கள் ஜவாப்தாரிகளல்லவென்றும் தங்

களுடைய நன்மை தீமைகளுக்கு மறுமையிலோ இம்மையிலோ லாப நஷ்டம் கிடைக்காதென்றும் உறுதியாக நம்புகிறார்கள். மனிதர்கள் தனித்தனியே இப்படி நினைப்பதல்லாமல் சில ஜாதியார்களும் சில தேசத்தார்களும் கூட்டமாக இப்படியே நினைக்கிறார்கள். இப்படி நினைக்கும் ஜாதியாருக்கும் தேசத்தாருக்கும் ஆண்டவன் இவ்வுலகத்திலேயே தண்டனையை விதித்துக்காட்டி யுள்ளான்.

"அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி வந்ததென்று பார்க்கவில்லையா? இவர்களைக் காட்டினும் அவர்கள் பலாட்டியத்தில் சிறந்தவர்களா யிருந்து பூமியைப் பறித்தார்கள்; இன்னும் இவர்கள் அதன்மேல் கட்டியிருப்பதைக் காட்டினும் மிகப்பெருக்கமாய்க் கட்டியிருந்தார்கள். ஸ்பஷ்டமான உபதேசங்களுடன் தூதர்களும் அவர்களுக்கு வந்தார்கள்; ஆதலின் அவர்களுக்கு அநீதம் செய்யவேண்டுமென்று அல்லாஹ்வுக்கு யுக்தமாய்ப் படவில்லை; ஆனால் அவர்கள் தங்களுடைய ஆவிக்குத் தாங்களே அநீதம் செய்துகொண்டார்கள். பிறகு தீமைசெய்தவர்களின் முடிவு தீமையாகவே முடிந்தது; ஏனெனின், அவர்கள் அல்லாஹ்வின் அறிக்கைகளைப் புறக்கணித்து அவற்றைப் பரிகசம் செய்தார்கள்."—அல்குர்ஆன்.

விநாசகாலம் வரும்போது விபரீத புத்தியும் தோன்றும். தீமையைச் செய்தவர் தனித்தனி மனிதரா யிருந்தாலும் அல்லது அவர்கள் ஒருதேசத்தாராகவாவது ஒரு ஜாதியாராகவாவது இருந்தாலும் அவர்களுடைய முடிவும் தீமையாகவே நேரும். மக்கத்திலுள்ள அரபிகள் அக்காலத்தில் ரூமுக்கும் ஷாமுக்கும் எமனுக்கும் வியாபாரத்தினிமித்தம் யாத்திரை போம்போது அங்கங்கே பூர்வகால

த்தில் பெருத்தோங்கிய ஜாதியாரெல்லாரும் தங்களுடைய மமதையால் மாண்டுபோன இடங்களின் பழைய கட்டிடங்களையெல்லாம் காண்பதுண்டு. அப் பழையகால மனிதர்கள் எல்லாரும் மஹோன்னத நிலையில் வாழ்ந்து மண்டலேசுரர்களாயிருந்து மஹா பெரிய கோட்டைகளையும் கொத்தளங்களையும் அமைத்திருந்தார்கள். அவர்களெல்லாரும் இருந்தவிடமும் தெரியாமல் மாண்டுபோயினர். பாழாய்க்கிடக்கும் அவர்களுடைய பழைய மாடமாளிகை கூடகோபுரங்களையெல்லாம் அரபிகள் காண்பார்கள். உண்மைவழியைக்காட்டி உயர்நடையில்நடத்தவந்த சாதாரணமான தீர்க்கதரிசிகளின் உயர்ந்த உபதேசங்களைக்கேட்டு நன்மார்க்கத்துக்கு வராமல் உலக இன்பத்தையே சதமென்றெண்ணித் தற்பெருமையால் இறுமாப்புக் கொண்டிருந்ததனால் அவர்களுடைய செல்வமெல்லாம் நிலைகுலைந்து எல்லாம் க்ஷீணித்துப் போய்விட்டது. ஆண்டவனுடைய முன் அறிக்கையின் கருத்தையுணர்ந்து அதன்படி அவர்கள் நடந்து கொள்ளாமல் தானென்ற மமதைகொண்டதனால் மாண்டுபோயினர்.

இப்படிப்பட்ட நிலைமையே இப்போது இஸ்லாம் ராஜ்யங்களுக்கு நேரிட்டுவிட்டதென்று அநேகர் கருதுகின்றனர். இஸ்லாம் ராஜ்யங்களுக்கு இப்போது தாழ்ச்சி வந்திருப்பது உண்மையே. ஆனால் இஸ்லாமிய அரசர்கள் தற்பெருமையால் மமதைகொண்டிருந்து அக்கிரமமும் அநீதியும் செய்ததனால் இப்படிப்பட்ட தாழ்ச்சி அவர்களுக்கு நேரிட்டதென்று யாம் சொல்லத் துணியோம். மமதைகொண்டு மாண்டுபோனவர்களுக்கு மட்டும் அல்லாஹுத்தஆலா குர்ஆன் ஷரீபின் இந்த அத்தியாயத்தால் எச்சரிக்கை செய்தானே ஒழிய மற்றவர்களைக் குறித்து

ஒன்றும் இங்கே சொல்லவில்லை. இஸ்லாமிய ராஜ்யங்களின் அதிகார வரம்புக்கு இக்காலத்தில் தாழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் அது முஸ்லிம் அரசர்களின் இறுமாப்பால் நேர்ந்ததன்று. ஆதலின் மேலேகூறிய குர் ஆன் ஆயத்தின் கருத்துப்படி இஸ்லாமிய ராஜ்யத்துக்குத் தாழ்ச்சி நேரிட்டில்லை. இது நிச்சயம். இஸ்லாமிய ராஜ்யத்துக்கு வேறு காரணங்களால் இக்காலத்தில் செல்வாக்குக் குறைந்திருந்தபோதிலும் அதனால் இஸ்லா மார்க்கத்துக்கு ஒன்றும் குறைவு வந்து விட்டதாய் எண்ணவேண்டாம். இராணுவப் பலக்குறைவால் இஸ்லாத்துக்கு ஒன்றும் பலக்குறைவில்லை. ஏனெனின், (1) இஸ்லாம் ராஜ்யம் இப்போது தன் மமதையால் ஒன்றும் குலைந்துபோகவில்லை; (2) இன்னும் எக்காலத்திலும் இஸ்லாத்துக்கு இராணுவப்பலமே தேவையிருந்ததில்லை. வேறு சில மதங்களைப்போல் இஸ்லாம் வாளாயுதத்தால் பரவிய தன்று. வாளாயுதத்தால் பரவாமல் தன் உயரிய நல் உபதேசத்தால் பரவிய இச்சன்மார்க்கத்துக்கு எப்போதும் இராணுவப்பலம் தேவையிருந்ததில்லை; இப்போதும் அப்படியே தேவையில்லை.

"ரோமர் நாட்டுக்கு நெருங்கியிருக்கும் தேசத்தில் ரோமர்கள் தோல்வியடைந்தார்கள்; இன்னும் அவர்கள் பாரஸீகர்களால் மேற்கொள்ளப்பட்டுப் பிறகு சில வருஷங்களில் பாரஸீகர்களை மேற்கொள்வர். முந்தியும் பிந்தியும் உண்டான கட்டளை அல்லாஹுத் தஆலாவுடையதே; இன்னும், அந்நாளில் அல்லாஹுத் தஆலாவின் உதவியால் மூமின்கள் களிப்படைவார்கள்."

இந்த முன்னறிக்கையின்படி கி. பி. 624-ல் ரோமரும் மூமின்களும் ஜயமடைந்தபோது அவர்களுக்கு என்ன இராணுவப் பலமிருந்தது? மேற்கூறிய தீர்க்கதரி

சனம் இறங்கிய காலத்தில் உலகமானது மிகவும் கொந்தளிப்புக்கொண் டிருந்தது. அதன் பின் 10-வருஷத்துக்குள் மூமின்கள் ஜயமடைந்தனர். அஃதேபோல் இப்போதும் உலகம் மிகவும் புறண்டு கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. இன்றுமுதல் இன்னும் 10 வருஷத்துக்குள் மூமின்கள் உச்சநிலையை அடையமாட்டார்கள் என்று யாரால் சொல்லமுடியும்? இனிமேல் நடக்கப்போவது இறைவனுக்கே தெரியும். ஆனால் இராணுவப் பலமில்லாமல் மூமின்கள் இன்னும் 10 வருஷத்துக்குள் எவ்வாறு உச்சத்துக்கு வரமுடியுமென்று நீங்கள் சந்தேகிக்கலாம். ஸூரத்தூர் ரூம் இறங்கிய அக்காலத்தில் மூமின்களுக்கு என்ன இராணுவப்பல மிருந்தது? அவர்கள் எவ்வாறு 10 வருஷத்துக்குள் ஜயமடைந்தார்கள்? எல்லாம் இறைவன் திருவிளையாட்டே. இராணுவப் பலம்தானா அன்று பதுரு யுத்தத்தில் 313 முஸ்லிம்கள் 1000-த்துக்கு மேற்பட்ட காபிர்களை வெல்லும்படி செய்தது? இஸ்லாத்துக்கு இராணுவப் பலம் தேவையில்லை; எல்லாம் இறைவனருளே; ஆண்டவனுடைய திருவேதத்தில் முழு நம்பிக்கையும் வைத்துப் பெருநபியவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு மூமின்களெல்லாம் ஒரே மனதாய் ஒத்துழைத்து இஸ்லாத்துக்காகப் பாடுபட்டதனால் அன்று அவர்கள் களிப்படைந்தார்கள். அக்காலத்தில் உற்றாரால் உதாசிணிக்கப்பட்டு ஊராரால் ஒதுக்கப்பட்டுச் சொந்த ஊரை விட்டு அயலூரில் அடைக்கலம் புகுந்திருந்த மூமின்களைக் காட்டினும் நாம் இக்காலத்தில் குறைந்தவர்களாய் விட்டோமா? அவர்களே ஒருவிதப் புகாரும் செய்யாமலிருந்தபோது நமக்கென்ன இப்போது புகார் இருக்கிறது? அவர்கள் கிஞ்சித்தும் மனந்தளர்ந்தார்களா? இல்லையே

அவ்வாறிருக்க நாம் ஏன் மனந்தளரவேண்டும்? வேறு எந்த வகையில் அவர்களைக் காட்டினும் நாம் தாழ்வடைந்திருக்கிறோம்? அவர்கள் இஸ்லாத்துக்காக ஒருமனதாய் ஒத்துழைத்ததுபோல் இப்போது நாமும் ஒத்துழைத்தால் அவர்களுக்கு ஆண்டவன் சந்தோஷத்தைக் கொடுத்ததுபோல் நமக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கமாட்டானு? நிச்சயமாகக் கொடுப்பான். "மூமின்களுக்கு உதவி புரிவதாக அல்லாஹுத் தஆலா வாக்குறுதிசெய்தான்; அல்லாஹ் தானளித்த வாக்குறுதியைத் தவறச்செய்யான்; ஆனால் பெரும்பான்மையோர் அறியமாட்டார்கள்."

இஸ்லாமார்க்கத்துக்கும் கிரிஸ்துமார்க்கத்துக்கும் இடையில் அநேக நூற்றாண்டுகள் வரையில் மதயுத்தம் நடந்து வந்ததன் காரணமாக அநேக கிரிஸ்தவர்கள் இஸ்லாமார்க்கமானது வாளாயுதத்தால்தான் பரவியது என்றும் இனியும் அதுவாளாயுதத்தின் உதவியால்தான் உலகில் நிலைத்திருக்க முடியுமென்றும் தவறாக எண்ணுகின்றனர். கிரிஸ்தவர்கள் மட்டுந்தான் இப்படி எண்ணுகிறார்களென்று நினைக்க வேண்டாம்; படித்த பல முஸ்லிம்களும் இப்படியே தவறாக எண்ணுகின்றனர். இவர்கள் இருதிறத்தார் நினைப்பதும் தவறே. இஸ்லாம் ஒருகாலத்திலும் வாளாயுதத்தால் பரவியதன்று. இப்போது சமீபத்தில் ஆபிரிக்கா கண்டத்திலும் ஆசியா கண்டத்தின் கீழ் தேசமாகிய சீனுவிலும் இஸ்லா மார்க்கம் காட்டுத் தீயைப்போல் மிகுதியாய்ப் பரவி வருகிறதே; இதற்கு வாளாயுதம்தான் காரணமோ? யாரேனும் இப்போது இதற்காக வாளாயுதப்பிரயோகம் செய்தார்களா? ஒருபோதும் இல்லை. முஸ்லிம்களின் உண்மையான நடையையும் இஸ்லாத்தின் உன்னதமான தத்துவத்தையும் கண்டு அநேகர் இச்சன்மார்க்கத்தில் சேர்

கின்றனர். ஆனால் ஐரோப்பிய மேல் நாடுகளில் சில வருஷங்களாய் மஹாயுத்தமொன்று நடந்து வந்ததனால் அங்கே அதிகமாய் இஸ்லாம் பரவ ஹேதுவில்லை. ஆனால் மேல் நாடு தன்னுடைய பழைய அசிகையான கொள்கையை ஒதுக்கிவிட்டு இப்போதுதான் இஸ்லாத்தின் உண்மையை உணர முன்வந்திருக்கிறது. இனி எளிதில் அங்கெல்லாம் இஸ்லாம் அதிகமாகப் பரவ ஆரம்பித்துவிடும்.

நான் இதுவரையில் சொல்லிவந்ததால் இஸ்லாத்துக்கு இராணுவப்பலமே தேவையில்லையென்று எண்ணிவிட வேண்டாம்; இராணுவப் பலமிருந்தால் சிறப்பேயொழிய குறையொன்றுமில்லை; ஆனால் இராணுவப் பலமில்லாவிடின் இஸ்லாம் உலகத்தைவிட்டு ஒழிந்துபோம் என்று சொல்லத்துணியோம். நீங்களும் அவ்வாறு எண்ணிவிட வேண்டாம். இப்போது இஸ்லாமிய ராஜ்யங்களின் இராணுவப் பலம் குறைந்திருப்பதிலும் ஆண்டவன் ஒருகருத்தை யமைத்திருக்கின்றான் என்றே எண்ணவேண்டும்; இஸ்லாமார்க்கம் எப்போதும் வாளாயுதப் பலத்தால்தான் இவ்வுலகில் பரவி நிலைத்திருக்கிறது என்று தவறாக நினைப்பவருக்கு அவருடைய மயக்கத்தை நீக்கி இச்சன்மார்க்கம் இராணுவப் பலமில்லாமலே உலகில் தழைத்தோங்க முடியும் என்பதை உலகத்தவருக்கு அல்லாஹுத் தஆலா எண்பிப்பதற்கே இப்படிச் சோதித்திருக்கிறான்போலும். இச் சன்மார்க்கத்துக்கு இராணுவப்பலம் தேவையில்லை; ஆனால் சன்மார்க்க நடையும், இறைவனது ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு இஸ்லாத்தில் நடப்பதும், தானதர்மமும், சமத்துவமும், சகோதரத்துவமும், அறிவின்சுடரும், அல்லாஹ்வின் பாதையில் சுறுசுறுப்பா யுழைப்பதும், சுயநயமில்லாமல் பரோபகாரச் சிந்தையுடன் பரமனுக்காகப் பாடுபடு

வதும் ஆகிய இவைகளே இஸ்லாத்தின் வெற்றிக்கு வேண்டியவை. இவையனைத்தும் பொருந்தியபின் உலகமுழுதும் சன்மார்க்க நடையைப் பரப்புவதான ஜிஹாதே கபீரின் பெருமைக்காக இராணுவப் பலமும் வேண்டியது அவசியமே. முஸ்லிமாயிருந்தாலும் அல்லாதவராயிருந்தாலும் யார் ஒருவர் சன்மார்க்க நடையை இவ்வுலகில் நிலைநிறுத்தப் பாடுபடுகிறாரோ அவருக்கு நம் முஸ்லிம்கள் உதவிபுரிதல்வேண்டும். இவ்வுலகில் சில ஜாதியார் தாங்கள்தான் இணையற்ற சாமர்த்தியம் வாய்ந்த ராஜாங்கத்தாரென்று இறுமாப்படைகின்றனர். ஆனால், "அல்லாஹுத்தஆலா தான் நாடியவரிட மிருந்து அரசுரிமையைப் பிடுங்கிக் கொள்ளுகிறான். தான் நாடியவரைத் தாழ்மையாக்குகிறான். அவனுடைய ஆதீனத்தில் சகல ஐசுவரியமும் இருக்கிறது. நிச்சயமாக எல்லா வஸ்துக்களின் மீதும் அவனுக்கு முழு அதிகாரமுண்டு."

உலகில் மன்னர்கள் உச்சநிலையை யடைந்தபின் சுயநயம் மிகுந்து மமதையால் மயக்கங்கொண்டு தாறுமாறாய் நடக்க எத்தனிப்பார்களாயின் அவர்களுக்கு ஸூரத்துர்ரூமில் சொல்வதே போல் சில வருஷங்களில் க்ஷீணதிசையுண்டாகும். இஸ்லாமிய அரசர்களுக்குமட்டும் இறைவனுடைய இச்சட்டம் விலக்கான தென்று எண்ணவேண்டாம். இவர்களுக்கும் மேலேசொன்னது போல்தான் மமதையால் தாழ்மையுண்டாகும். இப்போது இஸ்லாமிய ராஜ்யங்களுக்குண்டாயிருக்கும் தாழ்ச்சியை யுணர்ந்து அதனால் நாம் நற்பயனை யடையவேண்டுமாயின் ஆதிகாலத்திலிருந்த அஸ்ஹாபுமார்களைப்போல் நாமும் இறைவன் வார்த்தையில் முழு நம்பிக்கையும் வைத்து ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கட்டளையைத்

தலைமேற்கொண்டு சுயநயமும் இறுமாப்புங் கொள்ளாமல் தலைவணக்கத்துடன் இஸ்லாமிய சகோதரத்துவத்துக் காகவும் சன்மார்க்கப் பரவுதலுக்காகவும் ஒரு மனதாய் ஒத்துழைத்து உலகத்தவரெல்லாம் நம்மை நன்கு மதிக் கும்படி நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு நாம் நடக்க முன்வருவோமாயின் நம்முஸ்லிம்களுக்கு, "அவர்கள் மேற் கொள்ளப்பட்டுப் பிறகு மேற்கொள்வர்," என்னும் அருள் வாக்கின்படி ஜயமுண்டாகும். அப்படிப்பட்ட ஜயமும் இன் னும் "சில வருஷங்களில்" கைகூடும்படி எல்லாம் வல்ல இறைவனைச்சிந்தித்து வந்திப்போமாக. ஆமீன்.

கமலம்-2. 1-3-20 இதழ்-3.

முபஸ்மிலன்

இஷாஅத்தே இஸ்லாம்

" (மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியா னதை விதிக்கவும், (அவர்களை) நன்மையானவழியில் அழை க்கவும் உங்களில் ஒரு வர்க்கத்தார் இருப்பது அவசியம்; இவர்கள்தாம் ஜயமுடையவர்க ளாவார்கள்,"—(அல்குர் ஆன், 3:103)

இவ்வாக்கியம் எமது சம்பூரணமான பரிசுத்தம் நிறை ந்த குர்ஆன் ஷரீபு வேதத்தின் ஒரு சிறந்த ஆயத்தாகும்; "மதசம்பந்தமாகக் கட்டாயம் வேண் டாம்," (2:256) என்று எமது இறைவன் அவ்வேதத்திலேயே விதித்துள் ளான். இக்கட்டளையின்படி இதரமதஸ்தர்கள் இஸ்லாத்தில் வரும்படி வற்புறுத்தா விடினும் இச் சன்மார்க்கத்தின் இலேசான உண்மைப் பிரகாசங்களைப் பரப்பி இஷாஅத் தே இஸ்லாம் (சன்மார்க்கப் பரவுதல்) செய்வதற்கு நமக்